**Dated : 18.08.2026** (நேரம் : மதியம் 12.50 மணி)

**MCOP. No: 65/2025**

**ம.சா. 1 திரு. சாம் ரசாக்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

விபத்தானது இராமநாதபுரத்திலிருந்து கீழக்கரை செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில் நடந்தது. விபத்திற்குள்ளான TN 18 D 4075 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச்சென்றேன். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதனை தாக்கல் செய்துள்ளேன். நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட எனக்கு பின்னால் எனது நண்பர் ராஜேஷ்வரன் உட்கார்ந்து வந்தார். நான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று எதிரே வந்த 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அவரது ஓட்டுநர் உரிமம் காலாவதியாகவிட்டதாக கேள்விப்பட்டேன். ம.சா.ஆ.4 ஆய்வறிக்கையில் அவரது ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்களின்படி எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும், எனக்கு எதிர்கால மருத்துவச்செலவு எதுவும் ஏற்படாது என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.9 பில்களை கூடுதல் இழப்பீடு பெறுவதற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு இனங்களில் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. விபத்தானது என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.08.18 17:29:49 +0530

நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயம் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். பின்னால் அமர்ந்து வந்த எனது நண்பர் ராஜேஸ்வரனும் தலைக்கவசம் அணிந்திருந்தார். 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.08.18 17:29:56 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.